உ

சிவமயம்



மீசாலை வடக்கு சைவவேளாளர் மரபினரான

அமரர்

# திருமதி சங்கரப்பிள்ளை செல்லம்மா

அவர்களின்

சிவதப்பேறு குறித்த

# நினைவு மலர்

17.01.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மீசாலை வடக்கு

சைவவேளாளர் மரபினரான

அமரர்

# திருமதி சங்கரப்பிள்ளை செல்லம்மா

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

17.01.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தந்தையார் எமைப்பிரிந்து தெய்வபதம் சென்றிட்டாலும்

துணையாக நீஇருந்து நல மோங்க வேவைத் தாய்

சந்ததமும் நின் அன்பால் பெரும் மகிழ்வு தனைப்பெற்றோம்

சிந்தைதனி வேறிறைந்தாய் சீக்கிரமாகப் பிரிந்தாய்

இந்த மண்ணுலக வாழ்வை விட்டுப் பரனடியைச் சேர்ந்தாய்

என்று முன் ஆத்மாசாந்தி அடைந்திட இறையை வேண்டிப்

புந்தி கொண் டுனைவணங்கிப் பிள்ளைகள் நாம் பிரியமுடன்

பாதமலரில் இம்மலரைச் சூட்டுகின்றோம் தாயே.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தோற்றம்**
**20.10.1924**

**மறைவு**
**18.12.2006**

அமரர்

# திருமதி சங்கரப்பிள்ளை செல்லம்மா

## திதி நிருணய வெண்பா

ஆண்டுவிய மார்கழியில் அபர பக்கம்
பூண்ட திரயோ தசிதிதியில் – தாண்டவம்செய்
சிவனடியைச் சேர்ந்தார் செல்லம்மா விரைவாகப்
புவிதனிலே வாழ்வுவிட்டே தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்
## தேவாரம்

தலம் – திருக்கலயநல்லூர்

மாலயனுங் காண் பரிய மாலெரியாய் நிமிர்ந்தோன்
வன்னி மதி சென்னிமிசை வைத்தவன் மொய்த் தெழுந்த
வேலைவிட உண்ட மணிகண்டன் விடையூறும் விமல
உமையவளோடு மேவிலவூர் வினவி
சோலை மலி குயில்கூவக் கோல மயிலாலச்
சுரும் பொடு வண்டிசை முரலப்
பசுங்கிளி சொற்று திக்கச் காலையிலும் மாலையிலுங்
கடவுளடி பணிந்து கசிந்த மனத்தவர் பயிலுங்கலய
நல்லூர்காணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

நானேயோ தவம் செய்தேன்
சிவாய நம எனப் பெற்றேன்
தேன் ஆய் இன் அமுதமும் ஆய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம்
புகுந்து அடியேற்கு அருள் செய்தான்
ஊன் ஆரும் உயிர் வாழ்க்கை
ஒறுத்து அன்றே வெறுத்திடவே.

## திருவிசைப்பா

பாடியவர் - கருவூர்தேவர் தலம் - திருவிடைமருதூர்

இந்திரலோக முழுவதும் பணிகேட்டிணையடி
தொழு தெழத் தாம் போய்
ஐந்தலை நாக மேகலை யரையா
அகத் தோறும் பவிதிரியடிகள்
தந்திரி வீணை கீத முன் பாடச்
சாதிகின்னரங் கலத் தொலிப்ப
மந்திர கீதம் தீங்குழல் எங்கும்
மருவிடத் திருவிடை மருதே.

## திருப்பல்லாண்டு

சேலுங் கயலுந் திளைக்குங்
கண்ணார் இளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்டலங்
கு மென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறிய நெறி
தந்து வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்து நின்
(ற) றானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே பிறந்த பிறவியே எனக்கு
வாலி தாம் இன்பம் ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைமலர் உச்சி மேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருப்புகழ்

காதில் மணி ஓசையிட்டு வருமானர்
காம வலை உருபுக்கு மதியாயி
நீதி நெறியே வீடுத்து பலகாலும்
நீயுன் இரு தாழ் அளிக்க வரவேண்டும்
ஆதி மாக மாயி பெற்ற குமரேசா
ஆறுமுகமே படைத்த குருநாதா
தீதில் அடியார் மனதில் உறைவோனே
தேவர் குடி வாழ வென்ற பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது யிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைப் பட வேண்டும்

பத்துத் திங்கள் சுமந்தவளே – அவள்
பெருமைப்பட வேண்டும் – உன்னைப்
பெற்றதனாலே மற்றவரால் அவள்
போற்றப் பட வேண்டும்
கற்றவர் சபையில் உனக்கெனத் – தனி
இடமும் தர வேண்டும் – உன்
கண்ணில் ஒரு துளி நீர் வழிந்தால் – இந்த
உலகமே அழ வேண்டும்!

## அர்த்தமான நேரங்கள்

- உழைக்க நேரத்தை எடுத்தக் கொள் அது வெற்றியின் விலை.
- சிந்திக்க நேரத்தை எடுத்துக் கொள் அது சக்தியின் விலை.
- விளையாட நேரத்தை எடுத்துக் கொள் அது இளமையின் இரகசியம்.
- படிக்க நேரத்தை எடுத்தக் கொள் அது அறிவின் வாயில்.
- நல்லவற்றை புரிய நேரத்தை எடுத்தக் கொள் அது இன்பத்தின் பாதை.
- திட்டமிட்ட நேரத்தை எடுத்துக் கொள் அது சாதனைக்கு வழி.
- அன்பு காட்ட நேரத்தை எடுத்தக் கொள் அது இறைவனின் கொடை.
- சேவைபுரிய நேரத்தை எடுத்துக் கொள் அது வாழ்க்கையின் குறிக்கோள்.
- சிரித்து மகிழ நேரத்தை எடுத்தக் கொள் அது இதயத்தின் இன்னிசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில்........

தெங்கும் பனையும் தேன்சொரி பலாமா
எங்கும் கனிகளும் எழில்மிகு காட்சியும்
என்றும் விளங்கும் மீசாலைப் பதியில்
நன்றே பயிர்செய் துழைத்த குடும்பமே
சின்னத் துரையும் பெண் வள்ளிப் பிள்ளையும்
பண்ணிய நல்லப் பேறத னாலே
பிறந்தவர் அறுவரில் இரண்டாவ தாகவும்
மற்றும்பெண் ணிவளேதான் மூத்தவள் ஆகவும்
வந்தனள் செல்லம்மா நற்செல்வமாகவே.

ஆயிரத்து தொழாயிரத்து அருபத்து நாலில்
ஆசையாய் பெற்ற மகளினை வளர்த்து
ஆவலாய் கற்க அமெரிக்கன் மிஷனாம்
பேசுவார் இதைப் பழம் பள்ளி என்றுதான்
பூதத் தம்பிச் சட்டம்பி யார் காலம்
பூலோகம் அறியும் பெருமையாம் பள்ளியில்
சேர்த்தனர் பெற்றோர் செல்வத்தைத் தானே.

மகாபா ரதமும் இராமா யணமும்
பாடங்களில் அதன் மேன்மை சொல்லும்
கல்வி யறிவும் அன்பும் பண்பும்
எல்லோ ரிடத்தும் விதைக்கும் தன்மையும்
கொண்டதாம் படிப்பில் ஆர்வம் காட்டியே
கண்டனன் மகிழ்ச்சி செல்லம்மா தானுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைப் பருவம் கடந்தால் பெண்களை
மெள்ளென நிறுத்தும் பண்புடைப் பெற்றோர்
உள்ளம் மாறாத கதைதான் இங்கும்
ஆதலால் செல்வத்தின் கல்விக்கும் தடைதான்
ஏதும் செய்திட முடியாமல் வீட்டில்
வேலைகள் தன்னை விசுவாச மாகவே
தானாகச் செய்து வந்திட ஓடியும்
பத்தொன்ப தேவயது வந்தும் சேர்ந்ததே.

பெற்றவர் பிள்ளையின் திருமணம் காண
நற்றவக் குடும்பமாம் அதே மீசாலையில்
அருணாசலமும் வாரிப் பிள்ளையும்
பெருமையாய் பெற்ற புத்திரர் நால்வரில்
மூன்றாம் மகனாம் சங்கரப் பிள்ளையைத்
தேர்ந்தே பேசித் திருமணம் முடித்தனர்.

சங்கரப் பிள்ளையும் செல்லம் மாவுமாய்
தங்கிடச் செல்வம் செழித்திடும் வகையினில்
தக்காளி வெண்டி கத்தரி மிளகாய்
பாகல் புடோல் பூசினி பயற்றை
வள்ளிக் கொடியென வளமான பயிர்கள்
உள்ளத் துவகையாய் நாட்டியும் மேலும்
சிகரட் புகையிலை காரப் புகையிலை
சிறப்பாக நாட்டி மேலைத் தேயத்தில்
நல்ல இலாபமும் பேணிய காலமும்
சொல்லுவார் மீசாலை வேம்பிராய் ஊரார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்கள் செழித்த போல் வம்சமும் வளர
அருணா சலமும் சோம சுந்தரமும்
அருமகளாக கோமதி யம்மாவும்
சுப்பையா யுகராசா வன்னிய சிங்கமும்
பிறந்தனர் குலமும் நன்கு சிறக்கவே.

வேம்பிராய் தோட்டத் தருகே வீடும்
மேம்பட மேலும் வாங்கிச் சேர்த்து
பிள்ளைகள் கல்விக்கு வழிவகை காட்டி
பெருமையாம் தோட்டத்தில் ஊக்கமும் காண
மூத்தவன் அருணா சலத்துக்கு ஒத்தவள்
ஈஸ்வரி என்றே மணமும் முடித்திட
பேரப் பிள்ளைகள் லகிந்தன் கவிதா (காயத்திரி)
கபிலன் கமலதாசன் எனுமிவர் நால்வரும்
பிறந்தது கண்டு உவகை கொண்டனரே.

இரண்டாம் மகனாம் சுந்தரம் தனக்கு
உரியவள் புவனேஸ் வரியாள் என்றே
மணமும் முடித்திட மகிழ்ச்சியும் காண
தசநந்தனும் மகுடபதியும்
பிறந்தது கண்டு உவகை கொண்டனரே.

கோமதி யம்மா மகளாம் அவட்கு
கோர்ட்டினில் பணிபுரி அசோக பாலனை
பேசியே திருமணம் முடித்துப் பின்னும்
கனடாவிற் கனுப்பி கற்பனை பலவும்
கண்டதில் குறையென்ன சொல்லவும் வேண்டுமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியால் தானும் உயர்வேன் என்றுமே
கற்றவன் சுப்பையா சாவகச்சேரியில்
உற்ற நிர்வாகமாம் நகர சபையினில்
பணிதானும் பெருமையாய் புரிந்திடப் பார்த்து
அணி செய்ய சரஸ்வதி யாளினைப் பேசியே
திருமணம் செய்திட அருமையாம் ஒருமகன்
பேரன் பகலவன் பிறந்தனன் என்று
பூரித்திட்டனர் பெரியவர் தாமே.

வன்னிய சிங்கமாம் கடைக் குட்டியுமோ
அன்னிய தேசம் தான் ஆள்வேன் என்றுமே
சுவிஸ் நாட்டினிலே கடைதனை நடத்தி
சாந்தியாளை திருமணம் செய்து
சவீன் சகீன் சசீன் மூவரும்
பிறந்தது கேட்டு உள்ளம் மலர்ந்தும்
ரெலிபோனில் அடிக்கடி உரையாடக் கேட்டும்
வவுனியா சென்று பேரரரைப் பார்த்தும்
உள்ளம் மலர்ந்தனள் செல்லம்மாவுமே

சங்கரப் பிள்ளையார் தளர்ந்துமே சென்றிட
மங்கிய வாழ்வது மனமோ குலைந்திட
பேரப் பிள்ளைகள் லகிந்தன் கபிலனும்
தூரப் போனாரோ பிரான்ஸ் இனியென்ன
நாட்டிலும் குழப்பம் நாளும் கலக்கம்
அரிசி மா சீனி மண்ணெய் என்று
அகோர விலைகளும் புரியாத புதிர்களும்
சங்கக் கடைகளில் தினமும் கியூவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கம் இனிநான் இருந்தென்ன செய்வேன்
போவோர் வருவோர் புகழுரைசொல்லியும்
மனதும் குமைந்திட்ட மாயம் தான் என்ன
வெற்றிலைத் தட்டும் தேநீர் குவளையும்
தப்பாமல் யாவர்க்கும் கொடுத்தும் அடிமனம்
தனிமையே வாழ்வு என்று கொதித்திட
சைக்கிள் திருத்தி உழைத்தாலும் பின்பு
ராசா தானே தனிக்கப் போகிறான்
பாராமல் வீடுவரோ பணியெல்லாம் செய்வானோ
என்ன வாழ்வீது ஏதும் அறியேனே
என்று மனமும் மிகவும் நொந்திடக்
கவலை மிகுந்தது காய்ச்சலும் வந்ததே

காய்ச்சலை மாற்றவும் கவலையை மாற்றவும்
ஏற்ற கதைகளும் மருந்து அனுமானமும்
கவனித்து மாற்றிட அருணா சலத்தின்
வீட்டினர் மறித்து வழிவகை செய்திட
அமைதி என்று வேம்பிராய் மீண்டும்
சிலவாரம் தான் போயும் சேர்ந்து
சொல்லொணாத் தூரம் தேசங்கள் அங்கு
எல்லோரும் போயிட இங்கென்ன வாழ்வு
பெருத்த யோசனை தான் வந்து மூண்டதோ
கமுத்து நோவு என்று மருந்துமே
குடித்து இரவும் ரீவீயில் நாடகம்
பார்த்துப் படுத்தவர் செல்லம்மா காலையில்
தூக்கத்தால் எழும்பாத நிலையினைக் கண்டு
ஏக்கத்தால் கத்தி புலம்பிய இராசாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கி நிறுத்திட முடியாமல் துவண்டு
ஏது செய்குவன் இனியென்ன செய்குவன்
என்று அரற்றி ஏங்கித் துடித்து
அம்மா என்று அழைத்திட்ட பிள்ளைக்கு
ஆறுதல் வார்த்தை கூற நினைத்தும்
வாயசைத்தும் பேசிட முடியாமல் பின்பு
வைத்திய சாலைகள் கொண்டு சென்றும்
வைத்தியம் பலிக்காது போனதே என்று
மீண்டு வந்து தானமும் கொடுத்து
நீண்ட நல்வாழ்வு நிலைத்திடு வகையினில்
செய்திட மறுநாள் திங்கள் பிற்பகல்
போயினள் சிவன் தாள் செல்லம்மா தானே.

## தேற்றம்

மண்ணுலகிற் பிறந்திடுவோ ரென்றோதான்
மறைந்துமே விண்ணுலகு சென்றிடுவார்
திண்ணமிது என்பதை நாம் நன்கறிவோம்
தினமுமமே புண்ணியங்கள் செய்திடுவோம்
கண்ணுதலைக் கொண்டோனாய் விளங்குமீசன்
கழலடியை எந்நாளும் வணங்கிடுவோம்
உண்மைதனை நன்குணர்ந்து கொண்டு வாழ்வில்
என்றுமே மனச்சாந்தி பெற்றுவாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை வைத்தியக் குறிப்பு

## 01) தலைவலி மூக்கடைப்பு நீங்க.

பிரயாணத்தின் போது வாந்தி எடுத்தால் தினசரி ஒரு நெல்லிக்காய் என தொடர்ந்து 41 நாட்கள் சாப்பிட்டு வர வாந்தி வராது.

தலைவலி மூக்கடைப்பு நீங்க நெல்லிக்காயின் விதை நீக்கி அரைலீற்றர் சாறு எடுத்து அதில் அளவுக்கு உப்பு சேர்த்து 3 நாள் வெயிலில் காய வைத்து பின் தேங்காய் எண்ணெய் கொதிக்க வைத்து அதில் நெல்லி சாறுகளையும் கலந்து கொதிக்க வைத்துக் கொண்டு மூக்கில் நுகர தலைவலி போகும்.

## 02) கல்லடைப்புக்கு

கல்லடைப்பு ஏற்பட்டவர்கள் தினசரி வாழைப் பொத்தி வாழைத்தண்டு வாழைக்கட்டை இவற்றை சமைத்து சோறுடன் சாப்பிட்டு வரவேண்டும்.

இரண்டு பெரிய மாதுளம் பழங்களை வாங்கி முத்துக்களை மட்டும் தட்டில் போட்டு காய வைத்து அதை இடித்து தூள் செய்து சல்லடையில் சலித்து எடுத்து வைத்துக் கொண்டு காலை மாலை இரு வேளையும் அரைத் தேக்கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தால் கல்லடைப்பு குணமாகும்.

## 03) வாய்ப்புண்

வாய்ப்புண் ஏற்பட்டால் தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் சிறிதளவு வாயில் ஊற்றி கொப்பளித்து சில நிமிடங்களின் பின் துப்பி விடுங்கள் ஒரு நாளைக்கு மூன்று வேளை பின் பற்றினால் வாய்ப்புண் குணமாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 04) மூல நோய்

உறைப்பான உணவுப் பொருட்களைத் தவீர்க்க வேண்டும் பழங்களை அதிகம் உண்ண வேண்டும். கீரை வகைகளில் பசளிக் கீரை வெந்தயக் கீரை போன்றவற்றில் ஒன்றை தினசரி சாப்பிட வேண்டும். கிழங்கு வகைகளில் கருணைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, கோவைக்கிழங்கு போன்றவற்றை உண்ண வேண்டும் அதிகமான நீரை குடித்தல் வேண்டும். எளிதில் சமிபாடு அடையும் பிஞ்சுக் காய்கறிகளை உண்ண வேண்டும்.

### 05) குதிக்கால் வெடிப்பு

மஞ்சள் கடுக்காய், எள், உப்பு இவைகளை வகைக்கு அரைரூபா எடை எடுத்து அம்மியில் வைத்து வெள்ளாட்டுச் சீறு நீர் விட்டு மை போல அரைத்து அதே அளவு வெண்ணெய் சேர்த்து குழப்பி ஒரு சீசாவில் விட்டு வைத்துக் கொண்டு இரவு வேளையில் காலை சுத்தம் செய்து மருந்தைப் பூசிவிட வேண்டும். தொடர்ந்து 3 நாள் தடவினால் குதிக்கால் வெடிப்பு ஆறும்.

### 06) தேமல்

வெற்றிலையும் ஆறு மிளகையும் சேர்த்து அரைத்து பூசுக. அல்லது பப்பாளிப் பழம் தேய்க்குக.

### 07) குழந்தைகளுக்கு மாந்தம்

மாங்கொட்டைப் பருப்புடன் சுக்கையும் சேர்த்து நெருப்பில் சுட்டு தூளாக்கி தாய்ப் பாலுடன் குழைத்து குழந்தையின்

நாக்கில் தடவி விட மாந்தம் நீங்கிவிடும்.

### 08) குழந்தை எதையாவது விழுங்கிவிட்டால்

சர்க்கரை வள்ளிக்கிழங்கை அல்லது முட்டைக் கோதை வேகவைத்துச் சாப்பிடக் கொடுக்க விழுங்கிய பொருள் மலத்தோடு வந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09) தடிமன் இருமல்

துத்தி இலையை இடித்துச் சாறு எடுத்து நெய் கலந்து சாப்பிட்டு வர தடிமன் நீங்கும் முருங்கை இலைச் சாற்றை சம அளவு தேனுடன் கலந்து சாப்பிட தடிமன் நீங்கும் தேனும் எலுமிச்சைப் பழச்சாறும் சமனாகக் கலந்து ஒரு தேக்கரண்டி இரண்டு வேளை சாப்பிட்டு வரலாம். பசுவின் பாலை மஞ்சள் தூள் கலந்து சாப்பிட இருமல் நீங்கும்.

## 10) வாய்வுத் தொல்லை நீங்க

வாய்வுத் தொல்லை நீங்க உள்ளி சிறிதளவும் மிளகு சிறிதளவும் சேர்த்து அவிக்கவும். அவித்த உள்ளியை எடுத்து சாப்பிடவும் பின் ஆறிய நீரை பருகவும் உடனே வாய்வுத் தொல்லை பறந்தோடிவிடும்.

## 11) வயிற்று வலி

சாதிக்காயிலுள்ள விதையை எடுத்து ஒரு பாத்திரதில் உப்பு நீரை சிறிதளவு ஊற்றிய பின் நன்றாக உரசவும் பின் அதைப் பருகினால் வயிற்றுவலி குணமாகிவிடும்.

## 12) பொடுகு நீங்க

தலைப் பொடுகு நீங்க தேசிக்காயையும் வெந்தயத்தையும் அவித்து வாரத்திற்கு ஒரு முறை தலையில் தேய்த்து ஒரு மணி நேரத்திற்கு பின்பு குளித்தால் பொடுகு தொல்லை இல்லை.

## 13) வியர்க்குரு

ஒரு தம்ளர் பாலில் ஒரு தேக்கரண்டி வெந்தயத் தூள் போட்டு கொதிக்க வைத்து பருகுங்கள் இதனால் உடல் வியர்க்குரு தொல்லை இருக்காது தார்ப் பூசினி சாப்பிட்டாலும் வியர்க்குருவைத் தணிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தி நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| இலங்கை | – | லங்காபுவத் |
| இந்தியா | – | P.T.I.U.N.I |
| ஈராக் | – | I.N.A |
| பிலிப்பைன்ஸ் | – | P.N.A |
| பாகிஸ்தான் | – | A.P.P |
| ஜப்பான் | – | சியோடேகிகி |
| பிரான்ஸ் | – | A.F.P |
| இத்தாலி | – | அன்சா |
| ஜேர்மனி | – | D.P.A.A.D.N |
| யூகோஸ்லாவியா | – | டான்ஜிக் |
| ரஸ்யா | – | டாஸ் |
| எகிப்து | – | மேனா |
| மொராக்கோ | – | M.A.P |
| ஸைரோ | – | A.Z.P |
| கானா | – | G.N.A |
| கியூபா | – | பெரிலா |
| பிரேசில் | – | A.N |
| ஆர்ஜென்ரீனா | – | டீலம் |
| மலேசியா | – | பெர்நமா |
| ஈரான் | – | இர்னா |
| அமெரிக்கா | – | GNN, ரொய்டர் |
| பிரித்தானியா | – | I T N |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச நிறுவனங்களும் குறியீடுகளும்

| | |
|---|---|
| NATO | – வட அத்திலாந்திக் ஒப்பந்தம் |
| ADB | – ஆசிய அபிவிருத்தி வங்கி |
| ILO | – சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் |
| UNO | – ஐக்கிய நாடுகள் சபை |
| UNICEF | – ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் |
| UNHCR | – ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் |
| WHO | – உலக சுகாதார ஸ்தாபனம் |
| WEEC | – ஐரோப்பிய பொருளாதார சமூகம் |
| IMF | – சர்வதேச நாணய நிதியம் |
| FAO | – உலக உணவு அமையம் |
| WCC | – உலக திருச்சபைகள் அமையம் |
| ECM | – ஐரோப்பியப் பொதுச் சந்தை |
| IMBA | – சர்வதேச அணுசக்தி முகவர் |
| ITU | – சர்வதேச தந்தி நிறுவனம் |
| NASA | – தேசிய விண்கல விண்வெளித்துறை நிறுவனம் |
| OPEC | – பொற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமையம் |
| ITO | – சர்வதேச வர்த்தக ஸ்தாபனம் |
| ICRC | – சர்வதேச செஞ்சிலுவைக் குழு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



## நன்மை கடலிற் பெரிது

அன்புடையீர்!

எமது அன்புத் தெய்வம் இறைபதமடைந்த செய்தி கேட்டு உடனே வந்து உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசி, மூலம் அனுதாபம் தெரிவித்தோர்க்கும், இறுதிக்கிரியைகள், அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியை என்பவற்றை முறைப்படி நடாத்திய அந்தணக் குருமார்களுக்கும், இதில் கலந்து கொண்ட அன்புள்ளங்கள் யாவருக்கும் இந் நினைவு மலரை மிக அழகாக இயற்றித்தந்த ஆசிரியருக்கும் நூல்வடிவில் ஆக்கதித் தந்த கஜானன் பன்முகசேவையினர்க்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்

மீசாலை வடக்கு,
மீசாலை.



கஜானன் பன்முக சேவை அல்லாரை வீதி, மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விரு

❋ அருணாசலம்

\+

❋ வாரிப்பிள்ளை

❋ கந்தையா ❋ கிருஷ்ணசாமி ❋ சங்கரப்பிள்ளை ❋ திருஞானசம்பந்தர்

❋ கிருஷ்ணசாமி ❋ செல்லம்

அருணாசலம்
\+
ஈஸ்வரி
1) லகிந்தன் (பிரான்ஸ்)
2) காயத்திரி
3) கபிலன் (பிரான்ஸ்)
4) கமலதாசன்

சோமசுந்தரம்
\+
புவனேஸ்வரி
1) தசநந்தன்
2) மகுடபதி

கோமதியம்மா (கனடா)
\+
அசோகபாலன் (கனடா)

சுப்பையா
\+
சரஸ்வதி
1) பகலவ

❋ -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருட்சம்

※சின்னத்துரை
+
※வள்ளிப்பிள்ளை

...ஞானசம்பந்தர்

...ணசாமி ※செல்லம்மா ※குஞ்சம்மா ※குமாரவேலு நடராசா சண்முகம்

...ா)
...ா)

சுப்பையா (நகரசபை)
+
சரஸ்வதி
1) பகலவன்

யுகராசா

வன்னியசிங்கம் (சுவிஸ்)
+
சாந்தினி (சுவிஸ்)
1) சவீன் (சுவிஸ்)
2) சகீன் (சுவிஸ்)
3) சசீன் (சுவிஸ்)

※ – அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -**

[illegible] சேவை அல்லாரை வீதி, மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org